லிருந்து சங்ககிரிக்கு வரவேண்டுமானால், 40 கி.மீ. வந்துதான் அலுவலகத்திற்கு வரவேண்டிய சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, இதைக் கருத்திற் கொண்டாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, சங்ககிரி தாலுக்காவை இரண்டாகப் பிரித்து, எடப்பாடியைத் தனித் தாலுக்காவாக அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

9.25 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அமைப்பதாக இல்லை.

இந்துசமய அறநிலைய ஆட்சித் துறைக்கு உட்பட்ட கோவில்கள்

*3331 பி.திரு. ந. சௌந்திரபாண்டியன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆண்டு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வருமானம் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு உட்பட்ட கோவில்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 10,000-க்கு மேல் வருமானம் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்குட்பட்ட கோயில் கள் 2,120 உள்ளன.

திரு. ந, சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்திற்கு 10,000 ரூபாய் வருமான முள்ள கோவில்கள் தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான கோவில் கள் உள்ளன. இவையனைத்தும் தற்போது யாருடைய நிருவாகத் தில் இருக்கின்றன என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் இருக்கின்ற கணக்கின்படி ரூபாய் 10,000-த்திற்கும் அதிகமான வருவாய் உள்ள கோவில்கள் 2,120 தான். 10,000 என்று உறுப்பினர் சொன்னால், அப்படிப் பட்டத் தகவல் இந்தத் துறையிடம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10,000 ரூபாய் வருமானத்திற்குட்பட்ட கோவில்களில், ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட அறங்காவலர் குழு தற்போது இருக்கிறதா அல்லது தற்போது இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 22]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள மொத்தத் திருக்கோவில்களிலே ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதி கோவில்களிலே ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட அறங்காவலர்கள் இருக்கின்றார்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதியில் இருக்கின்ற வண்ணாத்திப்பாறை சரகத்தின் உச்சியிலுள்ள மங்களகிரித் கோட்டம் அல்லது கண்ணகிக் கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் ஆட்சிக்குட்பட்ட கோவிலா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோவில், கண்ணகிக் கோவில் தமிழ்நாட்டுக்குச் சொந்தமானதா அல்லது கேரளாவிற்குச் சொந்தமானதா என்பது எல்லைப் பிரச்சினையாக இருந்து வருகிறது.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைத் தொழில் போல் சென்னை மாநகரத்தில், குறிப்பாக நடுத்தெருக்களிலும், நடைபாதைகளிலும் உண்டி வசூலுக்காகவே சிறிய சிறிய கோவில்கள் உருவாகி வருகின்றன, இது அரசுக்குத் தெரியுமா ? அப்படியெனில் இப்படிப்பட்ட சமூகவிரோத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய நகரங்களில், குறிப்பாக சென்னை மதுரை போன்ற நகரங்களில், இப்படிப்பட்ட திடீர் கோவில்கள் வசூலுக்காக உருவாகி வருகின்றன. இதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வருமானத்திற்குட்பட்ட ஆலயங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்குப் பல மாதங்களாக ஊதிய நிலுவையிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அந்தப் பாக்கித் தொகைகளை உடனடியாக அவர்களுக்குக் கொடுப்பதற்கும், அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்ற பெரிய ஆலயங்களோடு இந்தச் சிறிய ஆலயங்களுடைய நிர்வாகத்தை இணைக்கவும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, சிறிய கோவில்களுக்குப் பெரிய கோவில்களிலிருந்து நிதி மாற்றம் செய்யப்பட்டு ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டுமென்று

[1990 மார்ச் 22

9-30 மணி

கொள்கையை ஏற்கெனவே இருந்த அரசு உருவாக்கியிருந்தது. அதன் மூலமாக ஏறத்தாழ 1989 ஆம் ஆண்டு இறுதி வரை 40 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட கொள்கை நீடிக்க வேண்டுமா என்பது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோவில்கள் பரம்பரை தர்மகர்த்தாக்களின் கீழ் இயங்கிக் கொண்டு வருகின்றனவே, அவற்றையெல்லாம் இந்த அரசு மாற்றி பரம்பரை தர்மகர்த்தா முறையை ஒழித்துக் கட்டி, அரசே நேரிடையாக நியமனம் செய்து கோவில்களை நடத்துவதற்கு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, ஏறத்தாழ 200 ரூபாய் வருமானம் உள்ள சிறிய கோவில்கள் உள்பட தமிழ்நாட்டில் 35 ஆயிரம் கோவில்கள் இருப்பதாகக் கணக்கு இருக்கிறது. அதிலே 20 ஆயிரம் கோவில்களில் பரம்பரை அறங்காவலர்கள் பொறுப்பிலே இல்லை. இருந்தாலும் கூட, பரம்பரை அறங்காவலர்கள் உள்ள கோவில்களிலே இருக்கிற பரம்பரை அறங்காவலர்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற திட்டமோ நோக்கமோ இல்லை. இருந்தாலும் கூட, பரம்பரை அறங்காவலர்களோடு சேர்த்து மேலும் 4 அறங்காவலர்களை அரசு நியமனம் செய்ய, அப்படிப்பட்ட ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரும் திட்டம் ஆய்வில் இருக்கிறது.

திரு. எம். முத்தையன்: தலைவர் அவர்களே, கோவிலுக்குச் சொந்தமான நிலங்களை எல்லாம், கோவில் பெயரால் தனியார்கள் எடுத்துக் கொண்டு, ஆக்கிரமித்துக் கொண்டு, விட மறுக்கிறார்களே, அதற்கு ஏதாவது புதிய சட்டமாகத் தயார் பண்ணி அந்த நிலங்களை விடுவித்து மறுபடியும் கோவில்களுக்கே கொடுப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, விவசாய நிலங்களைப் பொறுத்த மட்டிலே, குத்தகைதாரர்களுடைய கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் என்று சொல்வார்களே, அவர்களுடைய பொறுப்பிலே லட்சக்கணக்கான நிலங்கள் இருக்கின்றன. குத்தகை தொகையும் நிலுவையில் இருக்கிறது. அந்தத் தொகையை நிலுவை இல்லாமல் பெற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் நகர்ப்புற நிலங்கள் பல இடங்களிலே

1990 மார்ச் 22]

தனியார்கள் கையிலே சிக்கிக் கொண்டு இருக்கின்றன. அவற்றை மீட்பதற்கு இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டத் திருத்தம் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இராமநாதபுரம், சிவகங்கை தேவஸ்தானத்திற்கு உட்பட்ட கோவில்களை அறநிலையத்துறை எடுத்துக்கொள்ளும் திட்டம்.

*5929—**திரு. எஸ். எஸ். தென்னரசு :** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் சிவகங்கை தேவஸ்தானத்திற்கு உட் பட்ட கோவில்களை அறநிலையத்துறை எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை சமஸ்தானத்தைச்சேர்ந்த கோவில்கள் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின் கீழ் உள்ளன. பரம்பரை அறங்காவலர்கள் அங்கு நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறார்கள்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் பல கேள்விகளுக்கு பல விளக்கங்களை அளித் திருக்கிறார்கள். நான் குறிப்பிடுகிற இரண்டு சமஸ்தானங்களில் சிவகங்கை சமஸ்தானத்திற்கு 27 கோவில்களும், இராமநாத புரம் சமஸ்தானத்திற்கு 30 கோவில்களும் இருக்கின்றன. இப்போது அவற்றை அரசு வம்சம் கண்காணித்து வருகிறது. அவற்றினுடைய வருமானங்கள் எல்லாம் எந்த அளவுக்கு அரசுக்குப் பயன்படுகின்றன ? வருமானம் அரச வம்சத்திற்கு போவதனாலே கோவில்களிலே உண்டியல் போடுவது பொது மக்கள் மத்தியிலே, கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருகிறது. திருவாடனையில் இருக்கக்கூடிய பெரிய ஆலயம், காளையார் கோவிலில் இருக்கக்கூடிய பெரிய ஆலயம், நாட்டரசன்கோட்டை யில் இருக்கக்கூடிய பெரிய ஆலயம், திருக்கோச்சூரில் இருக்கக் கூடிய பெரிய ஆலயம் இவை அனைத்தும் புகழ் பெற்றவை. இப்போது ராணிகள் வசம் இருப்பதால் அவற்றை அரசாங்கம் நேரிடையாக ஏற்றுக்கொண்டு அரசாங்கமே அறங்காவலர்களை நியமிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, சிவகங்கை சமஸ்தானத்திலே மொத்தம் 83 திருக்கோவில்களும், 23 அறக்கட்டளைகளும் உள்ளன. அதேபோல இராமநாதபுரம் சமஸ்தானத்தில் 45 திருக்கோவில்களும் 9 அறக்கட்டளைகளும்